## வீதி அபிவிருத்தி அதிகாரசபை – 2015

---

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 73 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 16(3)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

அதிகாரசபையின் பூரண உரிமைத்துவம் கொண்ட உப கம்பனிகளான வரையறுக்கப்பட்ட மகநெகும நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனியினதும் வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியினதும், வரையறுக்கப்பட்ட இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனியினதும், வரையறுக்கப்பட்ட அதிவேகப்பாதை போக்குவரத்து (தனியார்) கம்பனியினதும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் கருத்திலெடுக்கப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே, மீளாய்வாண்டில் அதிகாரசபையினால் மேற்குறிப்பிட்ட உப கம்பனிகளுடன் ரூபா 1.9 பில்லியன் பெறுமதியான கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், அக் கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் மற்றும் நிலுவையிலுள்ள மீதிகள் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்)இணங்குதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 1–நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

(i) கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம்பெறும் நேரத்தில் இனங்காணப்பட்டு தொடர்புடைய காலத்திற்காக அறிக்கையிடப்படுதல் வேண்டிய போதிலும், உள்ளூர் வங்கி நிதியளித்தல் வீதி புனரமைத்தல் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் மீது மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 104,004 மில்லியன் கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் பிற்போட்ட செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டு தீர்க்கப்படாதுள்ள ரூபா 255.42 மில்லியன் பெறுமதியா்ன இடைக்கால கொடுப்பனவுச் சான்றிதழ்கள் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான செலுத்த வேண்டிய மீதிகள் அத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன.

(ii) அறிக்கையிடல் காலத்திற்குப் பின்னரான 12 மாத காலப்பகுதியில் வசூலாகுமென எதிர்பார்க்கப்பட்ட பெறவேண்டியவைகள் அல்லது தீர்க்கப்படவுள்ள பொறுப்பொன்றுநடைமுறைச் சொத்தொன்றாக அல்லது நடைமுறைப் பொறுப்பொன்றாக வகைப்படுத்தப்படுதல் வேண்டும். அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சிட்டைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வேலைதொடக்க முற்பணங்கள் இனங்காணப்பட்டு நடைமுறைச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டில் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்களிற்கும் கொடுப்பனவு பிரிவிகளிற்கும் வழங்கப்பட்டிருந்த ரூபா 59,598,529 கூட்டுத்தொகையான வேலைதொடக்க முற்பணங்கள் அவற்றின் தீர்ப்பனவுக் காலத்தினைக் கருத்திற்கொள்ளாது நடைமுறைச் சொத்துக்களாக எடுக்கப்பட்டிருந்தன. அதேநேரம் குறித்த பிரிவுகளிற்கு முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 12,237,389 கூட்டுத்தொகையான வேலைதொடக்க முற்பணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருந்தன.

(iii) தீர்க்கப்படவுள்ள திகதிகளை இனங்காணாது ரூபா 4,858,982,805 மற்றும் ரூபா 3,331,018,091 தொகையான பிடி காசுகள் முறையே நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 3 –கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மறும் வழுக்கள்**

உள்ளுர் வங்கி நிதியளித்தல் செயற்திட்டத்தின் கீழ் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரர்களிற்குச் செலுத்திய தொகை பிற்போட்ட செலவினமாக கருதப்பட்டு நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக கடனில் மீளளிக்கப்பட வேண்டிய மூலதனப் பகுதி பிற்போட்ட செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு நடப்பாண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கணக்கீட்டு நடைமுறை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 –ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

(i) சொத்தொன்றின் எஞ்சிய பெறுமதியும் பயனுள்ள ஆயுட்காலமும் குறைந்தது ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் திகதியிலேனும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும்,ரூபா 972 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வழமையாக, அதிகாரசபையின் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து கைதவிர்ப்புத் திகதி வரைக்கும் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. அதிகாரசபையின் சொத்துக்கள் அவை கொள்வனவு செய்யப்பட்ட மாதத்தினை தொடர்ந்துவரும் மாதத்திலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் கைதவிர்ப்பு மாதம் முழுவதற்கும் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தன. இது தொடர்பிலான வெளிப்படுத்தலொன்று நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூர் வங்கி நிதியளித்தல் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களினால் 2013 – 2015 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 507 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் அதிகாரசபையின் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின் பெறுமதி அத் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்ததுடன் அதன் மீதான பெறுமானத்தேய்வு ரூபா 219.51 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) வீதிகளின் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்களிற்காக 05 வெளிநாட்டு நிதியளித்தல் செயற்திட்டங்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 69,800,000 பெறுமதியான மோட்டார் வாகனங்களின் உரிமைத்துவம் மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(இ) (i) நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்பிலிருந்து கிடைத்திருந்த ரூபா 11,981,954 விற்பனை பெறுவனவுகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய வருமானமாக காட்டப்பட்டிருந்த போதிலும், அச் சொத்துக்கள் அதிகாரசபையினால் கையற்கப்பட்டிருந்த திகதியிலிருந்து கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 15,050,000 பெறுமதியான கட்டிடங்கள் மீது 2015 ஆம் ஆண்டிற்காக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, 2015 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 752,500 ஆல் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபையினால் பேணப்பட்ட 46 நடைமுறைக் கணக்குகளின் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 120,935,788,038 கூட்டுத்தொகையான வங்கிக் கடன்கள் குறிப்பிட்ட வங்கிகளால் உறுதிசெய்யப்பட்டிருந்த ரூபா 116,537,540,890 கூட்டுத்தொகையான மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) தெற்கு போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், தெற்கு அதிவேகப் பாதையின் கிரயம் ரூபா 114,166 மில்லியனாகும். இருப்பினும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் அதிவேகப் பாதையின் நேரொத்த பெறுமதி ரூபா 114,071 மில்லியன் எனக் காட்டப்பட்டிருந்தது.

(இ) துணைக் கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய / செலுத்தவேண்டிய மீதிகளிற்கும் குறிப்பிட்ட துணைக் கம்பனிகளினால் பெறவேண்டிய / செலுத்தவேண்டியவை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த உறுதிப்படுத்தல்களிற்கும் இடையே ரூபா 635,840,889 ஆன வேறுபாடொன்று இருப்பது அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

அரசாங்க நிறுவனங்களிடமிருந்தும் அவ்வாறே தனியார் தரப்பினரிடமிருந்தும் நிலுவையாகவுள்ள தொகைகளை அறவிடுவதற்கு அதிகாரசபை பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது. அத்துடன், வெளித்தரப்பினர்களிற்குச் செலுத்த வேண்டியவை உள்ளிட்ட மீதிகளைத் தீர்ப்பதற்காக அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட நிலமைகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) கிடைக்க வேண்டிய கணக்குகள்**

| | விபரம் | தொகை<br>ரூபா | சேவைநாடுனர் விபரம் | அறவிடப்படாதுள்ள காலம் / ஆண்டுகள் |
|---|---|---|---|---|
| (i) | கடன்பட்டோர் | 7,368,162,377 | 16 கடன்பட்டோர் கணக்குகள் | 2012 இலிருந்து 2014 வரை மற்றும் 1987 முதல் 2014 வரை |
| (ii) | சேவைகள் மற்றும் வாடகை முற்பணங்கள் | 7,405,680 | 08 அரசாங்க நிறுவனங்களும் ஆட்களும் | 2001 – 2014 |
| (iii) | வாடகை முற்பணங்கள் | 6,494,948 | 18 வைப்புக்கள் | 2008 – 2014 |
| (iv) | ஒப்பந்த முற்பணங்கள் | 27,402,432 | 28 ஒப்பந்ததாரர்கள் | 2005 – 2014 மற்றும் 08 ஆண்டுகளிற்கு மேலாக |
| (v) | ஏனைய முற்பணங்கள் | 3,740,000,000 | நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | 2014 முதல் 2015 வரை |
| (vi) | கணக்கு மீதான முற்பணங்கள் | 11,478,909 | வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனி | 2013 முதல் 2015 வரை |
| | | 71,100,621 | 05 ஒப்பந்ததாரர்கள் | 2013 முதல் 2015 வரை |
| (vii) | வேலைதொடக்க முற்பணங்கள் | 2,000,000,000 | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 2014 முதல் 2015 வரை |
| | | 1,119,966,845 | 34 ஒப்பந்ததாரர்கள் | 2001 முதல் 2015 வரை |
| (viii) | கொள்வனவு முற்பணங்கள் | 33,631,574 | 92 வழங்குனர்கள் | 2011 முதல் 2015 வரை மற்றும் 05 ஆண்டுகளிற்கு மேலாக |
| (ix) | பெறவேண்டிய வாடகைகள் | 1,781,623 | பொறளை நிலக்கீழ் பாதையிலுள்ள 02 கடை உரிமையாளர்கள் | 05 முதல் 08 ஆண்டுகள் வரை |
| | | 1,109,689 | கண்டி நிலக்கீழ் பாதையிலுள்ள 05 கடை உரிமையாளர்கள் | 03 முதல் 04 ஆண்டுகள் வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| (x) | அறவிடப்படாத சம்பளங்களும் ஏனைய படிகளும் | 62,004,844 | 260 அதிகாரசபையின் பதவியணி உறுப்பினர்கள் | ஒரு ஆண்டு |
| | | 62,757,658 | 94 அதிகாரசபையின் பதவியணி உறுப்பினர்கள் | இரண்டு ஆண்டுகள் |
| | | 1,718, 292 | 07 அமைச்சுக்களிற்கு விடுவிக்கப்பட்ட பதவியணியினர் | 2013 முதல் 2015 வரை |
| (xi) | அறவிடப்படாத பதவியணியினர் கடன்கள் | 3,104,786 | அதிகாரசபையின் 50 ஓய்வுபெற்ற ஊழியர்கள் | 01 முதல் 12 ஆண்டுகள் வரை |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

| | **விபரம்** | **தொகை** | **சேவைநாடுனர் விபரம்** | **தீர்க்கப்படாதுள்ள காலம்** |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (i) | சேவைநாடுனர் வைப்புக்கள் | 494,608,295 | 200 சேவைநாடுனர் வேலைகள் | 01 முதல் 07 ஆண்டுகள் |
| | | 227,865,985 | 119 சேவைநாடுனர் | 2010 முதல் 2014 வரை |
| | | 2,278,159 | 111 ஒப்பந்ததாரர்கள் | 29 ஆண்டுகளிற்கும் மேலாக |
| (ii) | பாதுகாப்பு வைப்புக்கள் | 973,394,696 | 1073 ஒப்பந்த வேலைகள் | 03 முதல் 10 ஆண்டுகள் மற்றும் 10 ஆண்டுகளிற்கும் மேலாக |
| (iv) | செயற்திட்டங்களிற்கும் ஏனைய ஒப்பந்ததாரர்களிற்கும் செலுத்த வேண்டியவை | | | |
| | - பூரணப்படுத்தப்படாத சிட்டைகள் மீது | 205,861,302 | 28 ஒப்பந்த வேலைகள் | 01 ஆண்டிற்குக் குறைவாக |
| | - அங்கீகரிக்கப்படாத முரண் வேலைகள் மீது | 135,099,370 | 27 ஒப்பந்த வேலைகள் | |
| (v) | ஒப்பந்ததாரர்களிற்குச் செலுத்த வேண்டியவை | 328,923,378 | 06 ஒப்பந்ததாரர்கள் | 01 ஆண்டிற்குக் குறைவாக |
| (vi) | வருமானத்திற்கு மாற்றப்படாத தாமதக் கட்டணங்கள் | 676,846,546 | 450 ஒப்பந்த வேலைகள் | 2010 முதல் 2015 வரை |

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

மொத்த அலகுகள், அலகு விலைகள் மற்றும் மொத்தப் பெறுமதிகளை உள்ளடக்கிய விபரமான பட்டோலைகள் போன்ற சான்றுகள் இன்மை காரணமாக ரூபா 552,044,028 கூட்டுத்தொகையான கருவிகள், நேர் பொருட்கள், நேரில் பொருட்கள், உதிரிப் பாகங்கள், எழுதுகருவிகள் மற்றும் அச்சுப் பொருட்களை கணக்காய்வில் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு** | **விபரங்கள்** |
|---|---|
| (அ) இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 373 மற்றும் 2015 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 336 ஆம் இலக்க அலுவலக சுற்றறிக்கை | அதிகாரசபையின் 02 உப அலுவலகங்களிற்கும் 03 பிரிவுகளிற்கும் வழங்கப்பட்ட ரூபா 31,651,973 கூட்டுத்தொகையான சில்லறைக் காசு கட்டுநிதிகளும் எரிபொருள் கட்டுநிதிகளும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்டிருந்த போதிலும் 06 மாதங்களிற்கு மேலாக சமர்ப்பிக்கப்படாதுள்ள ரூபா 3,903,709 பெறுமதியான 67 காசோலைகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 9.4 ஆம் பிரிவு | அதிகாரசபையின் 260 பதவிநிலை அங்கத்தவர்கள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மீளாய்வாண்டில் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். |
| (ii) 9.3.1 (viii) ஆம் பிரிவு | முகாமைத்துவ மட்ட பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக அதிகார சபையினால் வெற்றிகரமான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாடுகள்,முன்னைய ஆண்டிற்கான ரூபா 4,962.68 மில்லியனான வரிக்கு முந்திய தேறிய பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 1,674.93 மில்லியன் வரிக்கு முந்திய மிகையினை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 6,637.61 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் மொத்த வருமானம் ரூபா 12,506 மில்லியனால் அதிகரித்திருந்தமையே நிதிசார் விளைவுகளில் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக காணப்பட்டது. இருப்பினும், அதிகாரசபையின் செயற்பாட்டுச் செலவினமும் மீளாய்வாண்டில் ரூபா 5,868.47 மில்லியனால் அதிகரித்திருந்தது. அதேவேளை, உள்ளூர் வங்கி நிதியளித்தல் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் வீதிகளை அகலப்படுத்தி மேம்படுத்துவதற்கான கடன்கள் அதிகரித்திருந்தன.

### 3.2 அதிகாரசபையின் பெறுமதி சேர்த்தல்

வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் பெறுமதி சேர்த்தல் ரூபா 21,307 மில்லியன் ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 45 சதவீத அதிகரிப்பாகும். இருப்பினும், அரசாங்க பங்களிப்பு மற்றும் அதிவேகப் பாதை வருமானம் (அரசாங்க முதலீடுகளிலிருந்தான உழைப்புக்கள்) என்பன ரூபா 1,016 மில்லியனால் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக அமைந்திருந்ததுடன் அதிகாரசபையின் சுய பெறுமதி சேர்த்தல்கள் எதுவும் காணப்படவில்லை. அதேவேளை, கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் அரசாங்கப் பங்களிப்புக்களும் உதவிகளும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீதிகளை விஸ்தரித்து அபிவிருத்தி செய்தல் மற்றும் புதிய வீதிகளை நிர்மாணித்தல் போன்ற அதிகாரசபையின் பிரதான செயற்பாடுகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்றில் காட்டப்பட்ட சில குறிப்பிடத்தக்க மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | 2015 | 2014 |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | (855.55) | 2,717 |
| தேறிய சொத்துக்கள் | 161,409 | 170,633 |
| திரண்ட பற்றாக்குறை | (12,740) | (13,576) |

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் திரண்ட பற்றாக்குறை முன்னைய ஆண்டின் ரூபா 13,576 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 12,740 மில்லியன் வரை குறைவடைந்திருந்த போதிலும்,தேறிய நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் தேறிய சொத்துக்கள் முறையே ரூபா 3,572.55 மில்லியன் அல்லது 131 சதவீதத்தினாலும் ரூபா 9,224 மில்லியன் அல்லது 05 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 தேசிய வீதிகள் மற்றும் பாலங்களின் பராமரிப்பு வேலைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய வீதிகளின் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக ரூபா 4,994.78 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும்,மொத்த ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 1,996.81 மில்லியன் அல்லது 39.97 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) 23 செயற்திட்டங்களில் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த மற்றும் 06 நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகங்களினால் அமுலாக்கப்பட்டிருந்த வீதி பராமரிப்பு வேலைகளை 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 161.37 மில்லியன் கிரயத்தில் பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்த வேலைகள் மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரை மேற்கொண்டிருந்த உள்ளபடியான செலவினம் ரூபா 27.91 மில்லியனாக இருந்தது.

(iii) காலரீதியான பராமரித்தல், வடிகால்கள் மற்றும் கட்டமைப்பு மேம்படுத்தல்கள், சமிக்கை விளக்கு முறைமைகளையும், வீதி விளக்குகளையும், வீதி குறிகாட்டிகள் மற்றும் அடையாளங்களையும் பராமரித்தல், சிற்றளவு வீதி பாதுகாப்பு முன்னேற்றங்கள் மற்றும் அவசர பராமரித்தல்கள்/அனர்த்த வேலைகள் என்வற்றிற்காக ஒதுக்கீடுகளை பயன்படுத்துதல் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது. அதன் விளைவாக, நியம தர மட்டத்தில் தேசிய வீதி வலைப்பின்னலை பராமரித்தல் என்பது, ஒதுக்கப்பட்ட நிதிகளின் குறைவான பயன்படுத்தல்கள் காரணமாக பாதிப்படைந்திருந்தது.

#### 4.1.2 பொறியியல் சேவைகள் மற்றும் பாலங்கள் வடிவமைப்பு பிரிவின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த பிரிவின் வேலைத் திட்டம் 2015 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்ககப்பட்டிருந்த போதிலும், அத் திட்டத்திற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது 69 பாலங்களை வடிவமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டிற்கான செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 39 பாலங்கள் மாத்திரமே வடிவமைக்கப்பட்டிருந்தன.

(iii) பாதுகாப்பு தலைமையகத்திற்கான நுழைவுப் பாதையிலுள்ள பாலங்களினதும் கடற் சுழியோடல் விஸ்தரிப்பு மீதான தெஹிவலை கால்வாய்க்கு மேலுள்ள பாலத்தினதும் வேலைகள் அதிகாரசபையின் அதிகாரத்தின் கீழ் வராதிருந்த போதிலும், அதிகாரசபையின் பால வடிவமைப்பு பிரிவினால் வடிவமைக்கப்பட்டிருந்தன.

## 4.2 ஒப்பந்த நிர்வாகம்

### 4.2.1. வீதிப் புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்கள்

மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வேலைகள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வேலைகள்

(i) ரூபா 25,103 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் 259 வீதிகளின் முன்னேற்ற வேலைகளை பூரணப்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த வெலைகளின் ஒட்டமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டன. அந்த வீதி முன்னேற்ற வேலைகளில் 206 வேலைகள் அதிகாரசபைக்கு உரித்தற்ற வேலைகளாக காணப்பட்டதுடன் அவற்றின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான கிரயங்கள் முறையே ரூபா 17,928 மில்லியன் மற்றும் ரூபா 913 மில்லியனாகும். பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவான 53 செயற்திட்டங்கள் அதிகாரசபைக்கு உரித்தானவையாக காணப்பட்டன. அவற்றின் ஒப்பந்தப் பெறுமதியும் செலவிடப்பட்ட தொகையும் முறையே ரூபா 7,175 மில்லியன் மற்றும் ரூபா 581 மில்லியனாக காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்பட வேண்டிய மேலும் 84 செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன் அச் செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 4,902 மில்லியனாக காணப்பட்டதுடன், அதில் எந்த வேலைகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், அச் செயற்திட்டங்களில் ஒன்றுக்காக ரூபா 2.50 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அந்த 84 செயற்திட்டங்களில், 54 செயற்திட்டங்கள் அதிகாரசபைக்கு உரித்தற்றவையாக இருந்ததுடன் அவற்றின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,465 மில்லியனாகும்.

#### (ஆ) உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட வீதிப்புனரமைப்புச் செயற்திட்டம் (எல்பீஎவ்பி)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது நாடுபூராவும் 1,433.85 கிலோ மீற்றர் நீளமான 64 முன்னுரிமை வீதிகளை புனரமைப்பதற்கு உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 152 பில்லியன் தொகையான கடன்களை பெறுவதற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதன்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது 64 வீதிகள் புனரமைப்பதற்கு ரூபா 152 பில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களை வழங்கியிருந்தது.

அதிகாரசபை 2012 – 2015 வரையான காலத்தில் 07 உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 131,441 மில்லியன் மொத்தமான கடன்களை பெற்றிருந்தது. அதில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 4,523 மில்லியன் தீர்க்கப்பட்டிருந்தது. இதன்படி, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடனின் செலுத்தவேண்டிய பகுதி ரூபா 126,918 மில்லியனாகும் என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான பெறப்பட்ட கடன்கள் மற்றும் நிலுவையாகவுள்ள கடன் பகுதி என்பவற்றின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வங்கியின் பெயர் | ஆண்டிற்காக வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் | | | | மொத் | ஆண்டின் போது திருப்பிச் செலுத்திய முதல் | | மொத்தம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2012** | **2013** | **2014** | **2015** | | **2014** | **2015** | | |
| | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். |
| கொமர்ஷல் வங்கி | 1,266 | 634 | 2,647 | 1,497 | 6,044 | 128 | 361 | 489 | 5,555 |
| இலங்கை வங்கி | 3,703 | 9,637 | 10,402 | 6,606 | 30,348 | 218 | 1,469 | 1,687 | 28,661 |
| மக்கள் வங்கி | 3,369 | 5,234 | 4,806 | 562 | 13,971 | 607 | 1,220 | 1,827 | 12,144 |
| தேசிய சேமிப்பு வங்கி | 384 | 4,953 | 43,931 | 5,076 | 54,344 | - | 339 | 339 | 54,005 |
| அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 209 | 724 | * (32) | 309 | 1,210 | - | 45 | 45 | 1,165 |
| ஹட்டன் நஷனல் வங்கி | - | 3,614 | 8,562 | 7,365 | 19,541 | - | 136 | 136 | 19,405 |
| தேசிய அபிவிருத்தி வங்கி | - | - | 4,214 | 1,769 | 5,983 | - | - | - | 5,983 |
| **மொத்தம்** | **8,932** | **24,796** | **74,530** | **23,184** | **131,441** | **953** | **3,570** | **4,523** | **126,918** |

* 2013 இல் தவறுதலாக செலவு வைக்கப்பட்டு 2014 இல் திருத்தப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

(i) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களின் (எல்பிஎவ்பீ) கீழுள்ள வீதி நிர்மாணத்திற்கான ஒப்பந்தகாரர்கள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. பதிலாக 54 வீதிகளிற்கான ஒப்பந்த பிரேரணைகளை ஒப்பந்தகாரர்கள் தாமே கொண்டு வந்திருந்தனர். சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரேரணைகளின் பிரகாரம், 54 வீதிகளிற்குமான மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 162 பில்லியனாக காணப்பட்டதுடன் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (சீஏரீஈசீ) ரூபா 146.5 பில்லியனுக்கு இந்த ஒப்பந்த வேலைகளை வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது. இருப்பினும், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழுவானது சீஏரீஈசீ இனால் பரிந்துரைக்கப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதியினை எவ்விதக் காரணமுமின்றி ரூபா 155.79 பில்லியன் வரை அதிகரித்திருந்தது.

(ii) ஒப்பந்தகாரரின் பிரேரணைகளை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு (ரீஈசீ) முறைப்படி மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வேலை விடயங்கள், அளவைகள், மதிப்பாய்வை ஆதாரப்படுத்தும் வீதங்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு வீதிக்குமாக பொறியியலாருடைய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நெடுஞ்சலை நியம வீதத்தை (எகஎஸ்ஆர்) பயன்படுத்தி சீஏரீஈசீஇனால் ஒப்பந்தகாரருடைய பிரேரணைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அளவீட்டு பட்டியலில் (பிஓகியூ) ஒப்பந்தகாரரால் பிரேரிக்கப்பட்ட வீதங்களை பொறியியலாருடைய வீதங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் உயர்வாக இருந்ததுடன் ஒப்பந்தகாரர்களிலிருந்துஒப்பந்தகாரர்களிற்கு வீதங்கள் முரண்பட்டிருந்தன.

(iii) 2012 இன் முற்பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் மேலதிகமாக அஸ்பற் இடப்பட்டிருந்த சில வீதிப் பகுதிகள் எல்எவ்சீஎவ்பி இன் கீழ் புனரமைப்பதற்காக திரும்பவும் சேர்க்கப்பட்டிருந்தன.

(vi) உள்நாட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட செயற்திட்டம் 28 வீதிகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 55,392.2 மில்லியன் கடன் பெற்றிருந்தது. பெறப்பட்ட கடனில், செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்காத வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் ஏனைய நடவடிக்கைகளில் ரூபா 28,000 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்ததுடன் முற்பணங்கள் மற்றும் செய்யப்பட்ட வேலைகளிற்காக ரூபா 21,238.98 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன்விளைவால், கிடைக்கக்கூடிய கடன் மீதி ரூபா 6,153.34 மில்லியனாக இருந்தது. இருப்பினும், செய்யப்பட வேண்டிய மிகுதி வேலைகளிற்காக பெறப்பட்ட கடனிலிருந்து செலுத்த வேண்டிய தொகை ரூபா 34,153.34 மில்லியனாக இருந்தது. இதன்படி,மிகுதி வீதி வேலைகளிற்காக கொடுப்பனவுகளை செய்கின்ற வேளையில்எதிர்காலத்தில் கட்டாயமாக நிதிப்பிரச்சனைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளதுடன்இது நிர்மாண வேலைகளை மோசமாக பாதிக்கக்கூடும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(v) பெல்மடுல்ல – எம்பிலிபிட்டிய – நெகாகம வீதியை புனரமைப்பதற்கு மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பெறப்பட்டிருந்த ரூபா 2,172 மில்லியன் தொகையான கடனைப் பயன்படுத்தி எம்பிலிபிடியவில் சனாதிபதி இல்லத்தையும் 9.21 கி.மீ விஸ்தீரணமுடைய ஏனைய 17 வீதிகளையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 161.05 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(vi) 08 வீதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வீதிகளின் நீளம் மற்றும் அகலம், கொங்ரீட் வடிகால்கள், மதகுகள், பக்கவாட்டுச் சுவர்கள் மற்றும் வீதியின் மேற்பரப்பு நிர்மாணம் போன்ற சில வேலைகளைக் குறைத்து ரூபா 3,333 மில்லியன் தொகையான சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன்,இச் சேமிப்புக்கள் மூலச் செயற்திட்டத்தின் பட்டியலிடப்பட்ட நோக்கெல்லையினை கருத்திற்கொள்ளாது ஏனைய நிர்மாண செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. ஏனைய செயற்பாடுகளின் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செயற்பாடு | செலவிடப்பட்ட தொகை |
| --- | --- |
| --------------- | ---------------------- |
| | **ரூபா மில்லியன்** |
| அங்கீகரிக்கப்பட்ட வீதி புனரமைப்பு செயற்திட்டங்களிற்கு முரணாக 59 வீதிகளை நிர்மாணித்தல் | 943.54 |
| செயற்திட்டத்திற்கு முரணாக ஏனைய வீதிகளில் பாலங்களை நிர்மாணித்தல் | 65.86 |
| கேகாலையில் டௌசன் விடுதியை நிர்மாணித்தல், மாகாணப் பணிப்பாளரின் அலுவலகம் மற்றும் ஏனைய வீதிகளை நிர்மாணித்தல் | 1,370.23 |
| 07 ஏனைய முரண்பட்ட வீதிகளை நிர்மாணித்தல் | 953.47 |
| | ------------ |
| **மொத்தம்** | **3,333.10** |

**(இ) நரோவூட் அப்கோட் வீதியில் பாலத்தின் நிர்மாணம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நோர்வூட் அப்கோட் வீதியில் 9/12 ஆம் இலக்க பாலத்தின் நிர்மாணம் ரூபா 3,456,682 தொகையில் ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. 4 மீற்றர் முதல் 7 மீற்றர் வரை பாலத்தின் அகலம் அதிகரிக்கப்பட்டிருந்தமையால் ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 8,162,377 இற்கு அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் மேலதிக வேலைகளிற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைகளிற்காக ரூபா 3,425,378 தொகையினை பெற்றுக்கொண்ட பின்னர் பாலத்தின் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(ii) பாலத்தின் மேற்பரப்பின் ஒரு பகுதியில் மாத்திரம் கொங்றீட் இடல் பிரயோகிக்கப்பட்டிருந்ததுடன் அபாய சமிஞ்சை உருவாக்கப்பட்டிருந்த போதிலும்,கை இயந்திரத்தைப் பயன்படுத்தி பாலத்தின் ஏனைய பகுதிகள் போதிளவில் பாதுகாக்கப்படாமையினால் விபத்து ஆபத்துக்கள் உயர்வாக இருந்தன.

(iii) பாலத்தின் நிர்மாணத்தை 2010 ஒக்தோர் 26 இல் தொடங்குவதற்கும் 2011 மார்ச் 25 இற்கு முன்னர் முடிவுறுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாணம் 2016 யூன் 30 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) விஜயபாகுகந்த பாலத்தின் நிர்மாணம்**

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 7.9.11 ஆம் பந்தியிலுள்ள தேவைப்பாடுகளைப் பின்பற்றாது ரூபா 30.83 மில்லியன்பொறியியல் மதிப்பீட்டை விடவும் 25.31 சதவீதம் குறைவாகரூபா 23.90 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. பாலத்தின் நிர்மாண வேலைகளை 2012 சனவரி 09 இற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 04 மாதங்கள் கடந்த பின்னரும் கூட

2014 திசெம்பர் வரையிலும் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்வில்லை. இருப்பினும், தாமதக் காலத்திற்காக தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாதிருந்ததுடன், மேலதிக வேலைகள் காரணமாக ஒப்பந்தப் பெறுமதி ரூபா 11,992,423 இனால் அல்லது 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது

(ii) பாலம் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும்,பாலத்தினை பயன்படுத்துவோரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக பக்கவாட்டுச் சரிவுச் சுவர்களின் நிர்மாணம், கை இயந்திர செப்பனிடுதல், பாலத்தின் மேற்பரப்பின் மீது தாரிடுதல் மற்றும் பாலத்திற்கும் நுழைவுகளிற்கும் இடையே பின்புறத்தை நிரப்புதல் போன்ற வீதியின் பூரணப்படுத்தல் வேலைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2.2 திருகோணமலைவெளிச்சுற்றுவட்ட வீதியின்புனர் நிர்மாணம்

ஐக்கிய இராச்சியத்தின் உருக்கு பாலங்கள் செயற்திட்டத்தின் கீழ் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,495 மில்லியன் தொகை செலவழித்து மட்டக்களப்பு – திருக்கோவில் ஆறு- திருகோணமலை (ஏ-15) மற்றும் நகரத்தை பின்தள்ளி தொடர்புபட்ட அம்பேபுஸ்ஸ – குருநாகல்- திருகோணமலை (ஏ-6) என்பவை தொடர்புபடுகின்ற திருகோணமலையிலுள்ள வெளிச்சுற்று வட்ட வீதிகளில் எட்டு பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இருப்பினும், நிதிகள் இன்மை காரணமாக பாலங்களை தொடர்புபடுத்துகின்ற வீதிகள் 5 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2016 மே 31 இல் உள்ளவாறு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2.3 கதிர்காமம் சுற்றுலாவிடுதியின் நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கதிர்காமம் சுற்றுலா விடுதியின் நிர்மாண வேலைகள் 2004 இல் தனியார் கம்பனி ஒன்றினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்படாது இடைநிறுத்தப்பட்டிருந்தன. அதன் பின்னர், நிர்மாண வேலைகள் நேர் ஊழிய அடிப்படையின் ஊடாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, சுற்றுலா விடுதியின் கீழ் மாடியின் நிர்மாண வேலைகள் ரூபா 12,352,242 இற்காக ஒப்பந்தகாரருக்கு 2010 செப்தெம்பர் 28 இல் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 11,771,448 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரருடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2011 யூன் 07 இற்கு முன்னர் வேலைகள் பூர்த்தியாக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிர்மாண வேலை 2015 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட கீழ் மாடி வேலைகளில் குறிப்பிடத்தக்களவு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், முதலாவது மாடியின் நிர்மாண வேலைகளும் அக் குறைபாடுகளைக் கருத்திற்கொள்ளாமல் 2014 திசெம்பர் 24 இல் ரூபா 7,922,316 இற்காக அவருக்கே ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(iii) கட்டிடத்தை பயன்படுத்தக் கூடிய விதத்தில் நிர்மாண வேலைகளை பூரணப்படுத்துவதற்கு 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2008 ஆகஸ்ட் 20 இல் நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை கைச்சாத்திட்ட குத்தகை உடன்படிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், டென்சில் கொப்பேகடுவா வீதியிலுள்ள காணிக்காக வருடாந்த குத்தகை வாடகையாக ரூபா 6 மில்லியன் செலுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், 2009 நவம்பர் 19 ஆந் திகதி அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், மாதாந்த வாடகை ரூபா 1,000 எனத் திருத்தப்பட்டது. அமைச்சரவையால் நிர்ணயிக்கப்பட்டவாறு வருடாந்த குத்தகை கொடுப்பனவை குறைப்பதற்கு இயலக்கூடியவாறு குத்தகை உடன்படிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அலுவலகம் 2014 நவம்பர் 29 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஏப்ரல் வரை தலைமை அலுவலகம் புதிய கட்டிடத்திற்கு குடிபெயர்ந்திருக்காமையால் 2014 திசெம்பரிலிருந்து 2015 ஏப்ரல் வரை ரூபா 49.4 மில்லியன் தொகையான கட்டிட வாடகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) குறித்த வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரத்தின் கீழ் வராமை மற்றும் நிதிகள் கிடைக்காமை என்பன காரணமாக 2011 முதல் 2015 வரையான ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 14,857.52 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய 169 வீதிச் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அவை தொடர்பில் 2015 திசெம்பர் 31 வரை மேற்கொண்டிருந்த செலவினம் ரூபா 2,213.87 மில்லியனாகும். ரூபா 7,293.38 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமுடைய மேலும் 73 வீதிகளை அகலமாக்கல் மற்றும் முன்னேற்றுதல் செயற்திட்டங்கள் 2015 இல் மீள ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 வரை ஏற்பட்டிருந்த மொத்தக் கிரயம் ரூபா 1,689.63 மில்லியனாகும்.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்படுத்தப்படாத மற்றும் மெதுவாக அசையும் ரூபா 32,139,477 பெறுமதியான உதிரிப்பாகங்களின் இருப்புக்கள் பயன்படுத்தப்படாது 2012 ஆம் ஆண்டு முதல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 4,746,349 பெறுமதியானசீருடைகள், சப்பாத்து மற்றும் செருப்புகள், ரயர் மற்றும் பொருள் இருப்புக்கள்- அஸ்பற் பொறி பழுதடைந்த பொருளிருப்பு என்பன அவற்றினை கைதவிர்ப்பு செய்வதற்கு கவனத்திற்கெடுக்காமல் 2008 முதல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்தன.

## 4.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

அதிகாரசபையால் அதன் இணைந்த கம்பனிகளுடன் நிறைவேற்றப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியவையாக இருந்தன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) மக நெகும கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய தொகை**

(i) அதிகாரசபையால் வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களிற்கான வாடகை 2012 பெப்ரவரி 10 இல் உரிய கம்பனியுடன் கைசாத்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், 2010 முதல் 2014 வரையான காலத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 333,200,550 தொகையான வாடகையை அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு 2004 – 2007 வரையான ஆண்டுகளின் போது சொத்துக்கள், நுகர்வுப்பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 63,276,545 மானியத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 10,923,083 தொகையான கூலியினையும் 2014 ஆம் ஆண்டின் போது குளிர் கலவையினை வழங்கியமைக்காக ரூபா 5,685,164 தொகையினையும் அறவிடுதலுடன் தொடர்புடைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அல்லது வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைக்கு எதிராக எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அங்கீகரிக்கப்படாத முரண் கட்டளைகளும் வேலைக் கட்டளைகளும்**

(i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம்/பதிற் கடமை தலைவரின் 2011 மார்ச் 28 ஆந் திகதிய 2011 – 01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், முரண் கட்டளைகளையும் மேலதிக மற்றும் கூடுதலான வேலைக் கட்டளைகளையும் வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். இருப்பினும், பின்வரும் கூடுதலாக செய்யப்பட்ட வேலைகளிற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறான அங்கீகாரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

| | **அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படாத முரண் கட்டளைகளின் பெறுமதி** | **அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய முரண் கட்டளைகளின் தொகை** | **மொத்தம்** |
|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஒப்பந்தப் பெறுமதிக்குள் வழங்கப்பட்ட முரண் கட்டளைகள் | 987.4 | 272.8 | 1,260.2 |
| ஒப்பந்த பெறுமதியினை விஞ்சி வழங்கப்பட்ட முரண் கட்டளைகள் | 384.7 | 42.3 | 427.0 |
| மொத்தம் | 1,372.1 | 315.1 | 1,687.2 |

(ii) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 மார்ச் 19 ஆந் திகதிய 2013 – 01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு வேலைக் கட்டளைகளையும் வழங்குவதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். இருப்பினும், அக் கம்பனிக்கு வழங்கப்பட்ட பின்வரும் வேலைக் கட்டளைகளிற்காக முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

| | **வேலைக் கட்டளைகளின் பெறுமதி** | **2015 யூலை வரை செலுத்திய தொகை** |
|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 2013 இலிருந்து வழங்கப்பட்ட வேலைக் கட்டளைகள் | 17,093.4 | 2,898.7 |
| 2013 வரை வழங்கப்பட்ட வேலைக் கட்டளைகள் | 587.8 | 197.2 |
| மொத்தம் | 17,681.2 | 3,095.9 |

(iii) மேலும், முன் அங்கீகராம் இன்றியும் வீதிகளை அகலப்படுத்தி முன்னேற்றுவதற்கான ஒப்பந்தங்களிற்காக தேவைப்படுத்தப்பட்ட அங்கீகாரம் இன்றியும் வரையறுக்கப்பட்ட மக நெகும வீதி நிர்மாண மற்றும் உபகரண (தனியார்) கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த முரண் வேலைக் கட்டளைகளின் பெறுமதி ரூபா 19,368.4 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 3,281.9 மில்லியனாகும். அதற்கமைய, செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதியினைக் கணிப்பிட்ட பின்னருள்ள 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அட்டுறுச் சட்டைகளின் பெறுமதி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தலை செய்வதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.7 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) பதவியணி

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் பதவியணியின் நிலைமையின் பிரகாரம், 12 பதவிகளில் 710 வெற்றிடங்களும் 08 ஏனைய பதவிகளில் 1080 மிகைகளும் உள்ளதென வெளிப்பட்டது.

(ii) சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 06 வெற்றிடங்களும் தொழில்நுட்ப சேவையில் 144 வெற்றிடங்களும் எழுதுனர் மற்றும் இணைந்த சேவைகளில் 28 வெற்றிடங்களும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயலாற்றலை பாதகமாக பாதித்திருந்தது.

(iii) அதிகாரசபையின் பாலங்கள் வடிவமைத்தல் பிரிவு பிரதான பதவிகளில் தகைமையுள்ள ஆட்களிற்கான பற்றாக்குறையுடன் செயற்படுகின்றது. அதற்கமைய, 07 பிரதான முகாமைத்துவ பதவிகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்டன.

**(ஆ) ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய அமைச்சு அல்லது ஏதாவது வேறு அரசாங்க நிறுவனங்கள் சார்பில் ஏதாவது சந்தர்ப்பங்களின் கீழ் செலவினம் செய்வதற்கு அல்லது அதன் வளங்களை (மனித வளம் உள்ளடங்கலாக) ஈடுபடுத்தல் என்பவற்றிற்கு பொது முயற்சிகள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இதனை மீறி அதிகாரசபை ஏனைய நிறுவனங்களிற்கு அதன் 260 உத்தியோகத்தர்களை உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு விடுவித்திருந்ததுடன் பின்னர் அந்த ஊழியர்கள் மீளாய்வாண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மீள இணைக்கப்பட்டிருந்தனர்.

**(இ) கொள்வனவு பிரிவின் செயலாற்றல்**

(i) கொள்வனவு பிரிவு முறையான மற்றும் ஆக்கபூர்வமான வழிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்வனவு மேற்கொள்ளும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பில் காணப்பட்ட நலிவான கட்டுப்பாடுகள் காரணமாக அது எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் செயற்பட்டிருக்கவில்லை.

(ii) பிரிவின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 36 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 15 ஆக இருந்தது. பிரதான பொறியியலாளர், 3 ஏனைய பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற பிரதான பதவிகள் 2014 இலிருந்து வெற்றிடமாக் காணப்பட்டன.

(iii) ரூபா 31.32 மில்லியன் தொகையான காகிதாதிகளின் கொள்வனவு மாத்திரம் இப் பிரிவால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதேநேரம் ஏனைய கொள்வனவுகள் மீளாய்வாண்டின் போது இப் பிரிவின் சேவையினைப் பெற்றுக்கொள்ளாது ஏனைய பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய ''நல்லாளுகைக்கான பொது முயற்சி வழிகாட்டல்களின்'' பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தின் நாளதுவரையாக்கப்பட்ட பிரதிகள் ஒவ்வொரு நிதியாண்டு தொடங்குவதற்கு குறைந்தது 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அதிகாரசபையானது 2014- 2018 வரையான காலத்திற்காக கூட்டிணைந்த திட்டத்தை 12 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் 2015 சனவரி 01 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தது.

மேலும், கூட்டிணைந்த திட்டத்தை உரிய நேரத்தில் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2015 முதல் 2019 வரையான ஆண்டுகளிற்குரிய கூட்டிணைந்த திட்டமானது 12 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 முதல் 2020 வரைக்குமான கூட்டிணைந்த திட்டமானது 02 மாதங்கள் தாமதிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு பிரிவினதும் வேண்டப்பட்ட ஆளணியை கூட்டிணைந்த திட்டம் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இருப்பினும், உண்மையான தேவையினை மதிப்பீடு செய்தபின்னர் மனித வளத் தேவைப்பாட்டு விபரங்கள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2015 ஆம் நிதியாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டம்த்திற்கமைய தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், பணிப்பாளர் சபையின் மீளாய்விற்காக வருடாந்த செயன்முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பிக்கும் நடைமுறை அதிகாரசபையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2015 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்ததுடன் முழுமையாக திருத்தப்பட்ட பாதீட்டிற்கான அங்கீகாரம் 2015 திசெம்பர் 21 இல் பெறப்பட்டிருந்தது. காத்திரமும் பயனுறுதியும் மிக்க பாதீட்டு முறைமையொன்று இன்மை காரணமாக அதிகாரசபையின் திருத்தப்பட்ட பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. ஆகையால், பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுத் துறை | கணக்காய்வு அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | i. கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்துதல், பொறுப்புக்களை (நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத) வகைப்படுத்துதல் மற்றும் அட்டுறு செலவினத்தை கணக்கீடு செய்தல்.<br>ii. தொடர்புடைய தரப்புடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துதல் (மகநெகும கம்பனிகள் மற்றும் அதிவேகப் பாதை போக்குவரத்து கம்பனிகளுடனான கொடுக்கல் வாங்கல்கள்) |

| | | |
|---|---|---|
| | | iii. மாற்றப்பட்ட மற்றும் கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கணக்கீட்டு பரிகாரம் மற்றும் பேரேட்டுக் கணக்குகளிற்கான விபரமான பட்டோலைகளைத் தயாரித்தல். |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | i. குறித்த நோக்கங்களிற்காக நிதிகளை வினைத்திறனாக பயன்படுத்துதல், நிதிப் பிரேரணைகளை மதிப்பாய்வு செய்தல், வேலைக் கட்டளைகளிற்காக முன் அங்கீகாரம் பெறுதல், பட்டியலிடப்பட்டவாறு நிர்மாண வேலைகளை பூரணப்படுத்துதல் போன்றன. |
| | | ii. குறித்த நோக்கங்களிற்காக நிதிகளை பயன்படுத்துதல். |
| (இ) | இருப்புக் கட்டுப்பாடு | பபயன்படுத்த முடியாத இருப்பு விடயங்களை கைதவிர்ப்புச் செய்தல் |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | காணிகளை பயன்படுத்துதல் |